## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C. No. 139 /2019

2022 ம் ஆண்டு மார்ச் மாதம் 21 ம் நாள் திங்கள் கிழமை அரசுத்தரப்பு சாட்சி - 07 , திரு. மாரியப்பன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. மாரியப்பன் | வயது | : |
| த.பெ/ க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையார்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது, 12.11.2018 ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது, கழுமலைநாத சுவாமி திருக்கோவில் செயல் அலுவலர் செந்தில்ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று, நிலைய குற்ற எண் 378/18, ச/பி. 457, 380 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.5 ஆகும். வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலமுருகன், செல்வக்குமார் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ.6 ஆகும். மாதிரி வரைபடம் அதசாஆ.7 ஆகும். சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில்ராஜா, கந்தவேல், வீரமணி, பெரியசாமி மற்றும் மகசர் சாட்சிகளான பாலமுருகன், செல்வக்குமார் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை மறுதினம் 09.30 மணிக்கு ஜெயங்கொண்டம் சென்னீஸ்வரர் கோவில் அருகில் வைத்து கைது செய்து விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜா மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே தினம் 11.30 மணிக்கு எதிரி அவரது வீட்டிலிருந்து எடுத்து ஆஜர்படுத்திய, 50 ரூபாய் நோட்டுகள் - 6, 20 ரூபாய் நோட்டுகள்- 20, 10 ரூபாய் நோட்டுகள்- 15 ஆகியவற்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார்

செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.8 ஆகும். பணத்தை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.9 ஆகும். அதே தினம் 14.45 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், ஜெயங்கொண்டம் சேவகர் தெருவில் எதிரி ஆஜர்படுத்திய சுமார் 77.5 செ.மீ. நீளமுள்ள இரும்பு கம்பியை கைப்பற்றி, கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ.10 ஆகும்.

(ஆவணங்கள், சான்று பொருள்கள் குறியீடு செய்வதற்காக, அரசு தரப்பின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒம்/-செ.சுப்ரமணி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2,
ஜெயங்கொண்டம்.